1996 ஆகஸ்ட் 10]

ஆ. குறுகியகால வினா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகியகால வினா எண் 2, திரு. கு. மனோகரன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

குறுகிய கால வினா எண் 2

அருள்மிகு பெருமாள் திருக்கோயில் திருப்பணி

3041--**திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தருமபுரி ஒன்றியம், பழைய தருமபுரி அருள்மிகு பெருமாள் திருக்கோயில் திருப்பணி பாதியில் நிறுத்தியுள்ளதை முழுமையாக்க அதிகப்படியான தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். மேற்படி திருக்கோயில் திருப்பணியினை முடிக்க தேவையான அதிகப்படியான தொகையை வழங்க அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி ஒன்றியம், பழைய தர்மபுரி அருள்மிகு லட்சுமி நரசிம்ம பெருமாள் திருக்கோவில் ஒரு பிரசித்தி பெற்ற கோவில். அந்தக் கோவிலைப் புனரமைக்க 14-4-1990-ல் கழக ஆட்சியில் மாண்புமிகு கலைஞர் அவர்களால் ஆணையிடப்பட்டு, 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. அந்தத் தொகை போதாததால் தற்போது விலைவாசிக்கு ஏற்ப மேலும் 6 லட்சம் ரூபாய் தேவைப்படுவதால் அந்தத் தொகையை வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் மற்றும் வட்டம், பழைய தர்மபுரி அருள்மிகு லட்சுமி நரசிம்ம பெருமாள் திருக்கோவில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் உள்ள, ரூபாய் 2 ஆயிரத்திற்கும்கீழ் ஆண்டு வருமானம் பெறும் ஒரு சிறிய

திருக்கோவில் ஆகும். தற்போது இந்தத் திருக்கோவிலுக்கு அவசர சட்டம் 3/96-ன் படி தர்மபுரி பிரிவு ஆய்வரை தக்காராக நியமனம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திருக்கோவிலின் திருப்பணி தொடர்பாக, ராஜகோபுரத்தை இடித்து அப்புறப்படுத்தி விட்டு, புதிதாக 5 நிலை ராஜகோபுரம் கட்டுவதற்கும், சுற்றுச் சுவர்களைப் பழுதுபார்ப்பதற்கும் மற்றும் இதர திருப்பணிகளுக்கும் அரசு மானியம் ரூபாய் 2 லட்சத்து 4 ஆயிரத்திற்கும், ஆணையர் பொது நல நிதியிலிருந்து 1 லட்சம் ரூபாய்க்கும், பொதுமக்கள் நன்கொடையாக ரூபாய் 3 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய்க்கும், ஆக கூடுதலாக 6 லட்சத்து 80 ஆயிரம் தொகைக்கும் திருப்பணிக்காக நிர்வாக அனுமதி ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கிறது. பிறகு, மேற்படி திருக்கோவில் திருப்பணிகள் வேலைகளுக்காக அரசு மானியமாக ரூபாய் 2 லட்சத்து 4 ஆயிரமும், ஆணையர் பொது நிதியிலிருந்து 1 லட்சம் ரூபாயும், திருப்பணிக் குழு மூலம் நன்கொடையாக ரூபாய் 50 ஆயிரமும், ஆக கூடுதலாக ரூபாய் 3 லட்சத்து 54 ஆயிரம் நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்த ராஜகோபுரத் திருப்பணி வேலைக்கு மட்டும் மதிப்பீட்டுத் தொகையை விட 9·187 விழுக்காடு அதிகமான தொகைக்கு ஒப்பந்தப் புள்ளிக் கொடுத்து, ஒரே ஒப்பந்தக்காரர், திரு. சுந்தரமூர்த்தி என்பவருடைய ஒப்பந்தப்புள்ளி ஆணையர் அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சுவர் கட்டும் பணி மற்றும் பழுது பார்ப்பதற்கு வேறு ஒரு ஒப்பந்தக்காரருக்கு அனுமதி அளிக்கப்பட்டு, பணி முடியும் தருவாயில் உள்ளது. ராஜ கோபுரத் திருப்பணி வேலையைத் துவக்கிய திரு சுந்தரமூர்த்தி ஸ்தபதி, வேலையை முழுமையாகச் செய்து முடிக்காமல் பாதியில் பணியை நிறுத்திவிட்டார். பின்னர் திரு. கே. முனுசாமி, ஒப்பந்தக்காரர், தானே முன் வந்து மதிப்பீட்டுத் தொகைக்கே எஞ்சியுள்ள ராஜகோபுரத் திருப்பணி வேலையைச் செய்ய சம்மதம் அளித்ததன் அடிப்படையில் திருப்பணி வேலையை செய்து முடிக்க ஆணையரால் 1-12-1995-ல் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை செய்யப்பட்டுள்ள திருப்பணி வேலைக்கு பட்டுவாடா செய்தது போக தற்போது திருப்பணி சேமிப்புக் கணக்கில் இருப்பில் ரூபாய் 1 லட்சத்து 28 ஆயிரம் தான் இருக்கிறது. திருப்பணிக் குழு மூலம் வசூல் செய்யப்பட வேண்டிய நன்கொடை 3 லட்சத்து 76 ஆயிரம் ரூபாயில் 50 ஆயிரம் ரூபாய் மட்டுமே வசூல் செய்யப்பட்டுள்ளது. மேற்கொண்டு நன்கொடை பெறும் சாத்தியக்கூறுகள் இல்லை. மேற்படி திருக்கோவிலுக்கு முன் கதவு மற்றும் சில்லறை வேலைகளை முழுமையாகச் செய்து முடிக்க தற்போது சேமிப்புக் கணக்கில் இருப்பில் உள்ளது ரூபாய் 1 லட்சத்து

1996 ஆகஸ்ட் 10]

28 ஆயிரம் மட்டும் தான். இதற்கு மேல் கூடுதலாகத் தேவைப்படும் ரூபாய் 1 லட்சத்தை அறநிலையத் துறை பொது நல நிதியிலிருந்து வழங்க ஆணையரால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. பரிசீலனை முடிந்த பின் கூடிய விரைவில் திருப்பணி வேலைகள் செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரொம்ப விவரமாகப் பதில் சொல்லிவிட்டார், திரும்பக் கேள்வி கேட்க வேண்டுமா? (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு உறுப்பினர் கேட்டது, ரூபாய் போதவில்லை, இன்னும் 6 லட்சம் ரூபாய் வேண்டும் என்று சொன்னார். அதற்கு ஏதாவது சொல்லிவிட்டால் இக்கேள்வியை முடித்து விடலாம்.

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட தொகையில் 3 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய் பொதுமக்களுடைய நன்கொடையாகத் தரவேண்டும் என்பது திருப்பணிக் குழுவினுடைய எதிர்பார்ப்பு. ஆனால் அதில் 50 ஆயிரம் ரூபாய் மட்டும் தான் பொதுமக்கள் தங்கள் நன்கொடையாகத் தந்து இருக்கிறார்கள். மீதி வேலையை முடிக்க ஒரு இலட்சம் ரூபாய்--இருப்பு போதாததன் காரணமாக--ஆணையர் பொது நல நிதியிலிருந்து வழங்க பரிசீலனை நடந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]